WORD OF CHRIST

கிறிஸ்துவின் வசனம்



ஆசிரியர்
சகோ. அர்ச்சுனன் M.A., A.Bs.,



கிறிஸ்துவின் வசனம்
WORD OF CHRIST

மரம் 3 மார்ச் 1995 கனி 8

கேளுங்கள், தேடுங்கள், தட்டுங்கள்
Ask, Seek, Knock

நமதாண்டவராகி இயேசு கிறிஸ்து லூக் 11:9-ல் கேளுங்கள் அப்பொழுது உங்களுக்கு கொடுக்கப்படும்; தேடுங்கள் அப்பொழுது கண்டடைவீர்கள்தட்டுங்கள் அப்பொழுதுஉங்களுக்குத் திறக்கப்படும் என்றார்.

கேளுங்கள் என்று சொல்லியவுடன் தங்களுடைய இருதயத்தில் இருக்கிற எல்லா ஆசைகளையும் வெளிக்கொணர்ந்து கேட்க ஆரம் பித்து விடுகின்றனர். அதற்கு முன் ஆண்டவர் கூறும் வார்த்தையை யோவா 15:7ல் வாசிப்போம், நீங்கள் என்னிலும் என் வார்த்தைகள் உங்களிலும் நிலைத்திருந்தால் நீங்கள் கேட்டுக் கொள்வதெதுவோ அது உங்களுக்கு செய்யப்படும். நாம் முதலாவது அவரில் நிலைத் திருக்க வேண்டும் ஒரு பெயர் கிறிஸ்தவர்களாக வாழக்கூடாது நூற்றுக்கு அதிபதியை போல் அவர்மீது விசுவாசம்வைத்தவர்களாக ஜீவிக்க வேண்டும் கிறிஸ்துவுக்காக நாம் எதையும் செய்ய ஆயத்த முள்ளவர்களாகவும் இருக்க வேண்டும் ஆண்டவரின் திருவார்த் தைகள் எப்போதும் நம்மில் நிலைத்திருக்க வேண்டும் ஒரு சிறு பையன் ஆண்டவரின் வார்த்தையை சொன்னலும் அதை அப்படியே ஏற்றுக்கொள்ளுகிறவர்களாக இருக்கவேண்டும். திருவார்த்தையின் படி அனுதினம் ஜீவிக்க வேண்டும். இப்படி நடந்து கொண்டு அதிக கனிகள் உள்ள ஜீவியத்தை நீங்கள் செய்யும் போது ஆண்டவரின் நாமத்திலே பிதாவினிடத்தில் நீங்கள் கேடடுக்கொள்வதெதுவோ அதை அவர் யோவா 16:23, 24, ல் உள்ளதுபடி உங்களுக்குத் தருவார்.

தேடுங்கள் என்றவுடன் விளக்கேற்றும் நேரம்வரையும் ஏன் சிலர் விளக்கேற்றியபின்னும் எதையெதையோ தேடிகொண்டிருக்கின்றனர் ஆனல் வேத வசனங்களே தேடலாம் என்றால் அநேகருக்கு தூக்கம் வர ஆரம்பித்து விடுகிறது. தூங்கச் சென்று விடுகிறார்கள். முதலாவது தேவனுடைய ராஜ்யத்தையும் அவருடைய நீதியையும் தேடுங்கள் அப்பொழுது இவையெல்லாம் உங்களுக்குக்கூடக்

கொடுக்கப்படும். என்று மத் 6; 33ல் வாசிக்கின்றோம். பிரியமான தேவனுடைய மனுஷனே நீங்கள் இவ்வசனத்திற்கு கீழ்படிந்து தேவனு -டைய ராஜ்ஜியம் எங்கே? அவருடைய நீதி எங்கே சொல்லப்படு கிறது? என்று சொல்லி தேட ஆரம்பி, புதையல்களை தேடுவது போல் தேடு. அப்பொழுது நீங்கள் ஆசீர்வாதம் பெறுவீர்கள். உங்களுடைய வாழ்க்கை ஒளிமயமாக இருக்கும். கிறிஸ்து உம்மில் பிரகாசிப்பார். உன்னை அவருக்கு ஏற்ற பாத்திரமாக மாற்றுவார். உனக்கு சகலமும் கொடுக்கப்படும். இதை விடுத்து உலகம் கொடுக்கிற சந்தோஷத் தையும், சமாதானத்தையும் தேடாதே. அது மரணத்தை உங்கள் வாழ்க்கையில் கொண்டு வரும். அநேகர் போதை மாத்திரை அல்லது தூக்க மாத்திரைகளை தேடி, சாப்பிட்டு தங்களுடைய வேதனையை மறக்க முற்படுகின்றனர். அதன் முடிவு மரணமே. நண்பா! உன்னை உண்டாக்கினவர் இயேசு கிறிஸ்து. அவர் உன்னைக் கைவிடுவாரா? முதலாவது அவருடைய ராஜ்ஜியத்தில் பிரவேசிக்க பிரயாசப்படு. அதை தேட ஆரம்பி, காணல் நீரை தேடாமல் ஜீவத்தண்ணீரை தேடி பெற்றுக் கொண்டு ஆசீர் வாதமாயிருப்பாய்.

தட்டுங்கள். என்றால் ஐந்து புத்தியில்லாத ஸ்திரிகள் ஆண்டவரே, ஆண்டவரே எங்களுக்குத் திறக்க வேண்டும் என்றார்க ள் மத் 25:11 ஆண்டவர் வருமுன் ஆயத்தப்பட்டு இருக்க வேண்டு மல்லவா! அநேகர் இன்றும் இப்படித்தான் இருக்கின்றார்கள். இதோ சீக்கிரமாய் வருகிறேன் என்று சொல்லியிருக்கிறார். ஆனால் இம் மக்களோ இன்னும் ஆயத்தமாக வில்லை. காரணம் இயேசு பரமேறி போனதிலிருந்து இம்மட்டும் வருகிறார், வருகிறார் என்று சொல் கிறார்கள், இன்னும் வரக்காணோம் என்று சொல்கிறார்கள் இதோ வாசற்படியிலே நின்று தட்டுகிறேன்; ஒருவன் என் சத்தத்தைக் கேட்டு, கதவைத்திறந்தால், அவனிடத்தில் நான் பிரவேசித்து, அவனோடே போஜனம்பண்ணுவேன், அவனும் என்னோடே போஜ பண்ணுவான் என்று வெளி 3:20ல் ஆண்டவர் உரைக்கின்றார். இதைக் கேட்டும் அவருக்கு செவி கொடாமல் செவிட்டு விரியன் பாம்பைப் போல உங்கள் இதயக் கதவை திறக்காமல் இருந்தீர்கள் என்றால், அந்த ஐந்து புத்தியில்லாத ஸ்திரிகளை போல ஆண்டவர் கதவை அடைத்த பின்பு நீங்கள் தட்டவேண்டியிருக்கும். உங்களுக்கு கொடுக்கப்பட்ட காலத்தை பிரயோஜனப்படுத்திக் கொள்ள இப் பொழுதே சமயம் கிடைத்திருக்கிறது. கர்த்தர் உங்களை பெலப் படுத்துவாராக!.

ஆமென்

★ சபைச் செய்திகள்

பிப்ரவரி 23ம் தேதி சகோ. இஸ்ரேல் டானியேல் அவர்களின் மகன் சகோ. ஜெபாஸ்டின் அவர்களுக்கும் சகோ. பீட்டர் சாலோமோன், சென்னை அவர்கள் மகள்சகோதரி சில்வியா அவர்களுக்கும் பரிசுத்த விவாகம் சகோ. ஜீன், U.S A. அவர்களால் 13, சாய்நகர், கிறிஸ்துவின் சபையில் நடைபெற்றது. அநேகர் கலந்து கொண்டு வாழ்த்தினார்கள்.

★ பிப்ரவரி மாத வேத அறிவுப் போட்டியில் வெற்றி பெற்றவர்கள்

1. சகோதரி மேரி எலிசபெத் கலைவாணி—வத்தலக்குண்டு.
2. சகோதரி S. அன்பு ரோஸ் —அத்திமாஞ்சேரி.

★ சிறுவர் வேத அறிவுப்போட்டியில் வெற்றி பெற்றவர்கள்

1. P. ஜாஸ்மின் — அம்மாபட்டி
2. மீனா — வதிலை
3. V. முனியம்மாள் ...
4. N. ராஜலெட்சுமி ...
5. M. மேகராஜம் ...
6. M. மேக்டலேன் ...
7. S. கிருஷ்ணமூர்த்தி ...
8. S. செணபகமூர்த்தி ...
9. S கோபி ...
10. R. சரவணப்பாண்டியம்மாள்
11. K. பாப்பு — வத்தலக்குண்டு
12. P. பாண்டிக்குமார் ...
13. R. இப்ராஹீம் ...
14. P. வீரரமேஷ் ...
15. S. வீருசின்னம்மாள் வெங்கிடாஸ்திரி கோட்டை
16. P. எழில்ராஜா ...
17. v. அனிதா சொக்கலிங்கபுரம்
18. S.மாசிலாமணி கணவாய்பட்டி
19. P. செல்லமணி ...
20. M.வேல்மணி ...
21. S. மகாராஜா கணவாய்பட்டி

★ பிப்ரவரி மாத இதழின் விடைகள்

1. யாக்கோபு, யோவான் மாற் 3:17
2. சிரேனியு, லூக் 2:2
3. ஆடுமாடுகள் யோபு 36:33
4. ஓவீது சங் 38:4
5. இல்லை
6. பேலேகு ஆதி 10:25
7. இல்லை
8. பவுல்
9. 300 பேர்
10. ஆறுலட்சம்

★ சிறுவர் வேத அறிவுப் போட்டி விடைகள்

1, நகரம் எபி 13:14
2. நாமும் எபி 10:25
3. முந்தினதைப் எபி 8:13
4, மறைவான எபி 4:13
5. ஜாக்கிரதையாய்க் எபி 2:1

★இம்மாத வேத அறிவுப் போட்டி

1. உலகத்துக்குச் சிநேகிதனாயிருக்க விரும்புகிறவன் யாருக்குப் பகைஞனாகிறான்?

2. தேவனுடைய குமாரன் இல்லாதவன் எது இல்லா தவன்?
3. தேவனுக்கேற்கும் பலிகள் எது தான்?
4. தண்ணீர்கள் உடைந்தோடுகிறது போல தேவன் தாவீதுக்கு முன்னே யாரை உடைந்தோடப் பண்ணினார்?
5. எது எலும்புகளுக்கு ஔஷதமுமாகும்?
6. ஆத்துமாவுக்கு விரோதமாய் போர் செய்கிறவைகள் எது? முறை?
7. ஜெபிக்கும் போது ஸ்திரிகள் முக்காடிட்டு கொள்வது அவசியமா?
8. எவனில்லாமல் சண்டை அடங்கும்?
9. கர்த்தரை விட்டு அகன்று போகிறவர்களின் பெயர் எதில் எழுதப் படும்?
10. மேரிபாவின் தண்ணீரைப் பற்றிய காரியத்தில் முதலாவது மோசே மரித்தானா, ஆரோன் மரித்தானா?

★சிறுவர் வேத அறிவுப் போட்டி

(யாக்கோபு புத்தகத்திலிருந்து)

1. நாவானது சிறிய அவயவமாயிருந்தும்..... ..... பேசும்.
2. விசுவாசமுள்ள ஜெபம்..... ..... இரட்சிக்கும்.
3. ஒருவனையும் .... சோதிக்கிறவருமல்ல
4. கிரியைகளில்லாத .... செத்ததாயிருக்கிறது
5. நாளைக்கு .... உங்களுக்குத் தெரியாதே

குறிப்பு: வேத அறிவுப் போட்டியில் கலந்து கொள்ளும் சிறுவர் களுக்கு,— நீங்கள் தொடர்ந்து வேத அறிவுப் போட்டியில் கலந்து கொள்வது பற்றி மகிழ்ச்சியடைகிறோம். நீங்களாகவே விடைகளைக் கண்டுபிடித்து எழுதுங்கள். மற்றவர்களின் விடைகளைப் பார்த்து எழுதாதீர்கள். உங்கள் முகவரியை தெளிவாக எழுதுங்கள்.

ஆசிரியர்




WORD OF CHRIST

எங்களோடு சேர்ந்து தேவனை
ஆராதிக்க அன்புடன் அழைக்கிறோம்

ஞாயிறு காலை 9-00
புதன் மாலை 6-30

கிறிஸ்துவின் சபை
கணவாய்பட்டி ரோடு
வத்தலகுண்டு-624202

இவ்விதழ் இலவசமாக
அனுப்பப்படுகிறது.



MONTHLY MAGAZINE News Paper
WORD OF CHRIST: Regd. No, 84661-92.
Registerd No TN/DDL/19

PRINTED MATTER

To

If undelivered please return to:

THE EDITOR
WORD OF CHRIST
Post Office Box No. 5.
Batlagundu-624202.
S. India

Edited and publised by B. Arjunan M.A.,A.Bs. on behalf of church of Christ 2.2.63A/22 Kanavaipatti Road BTL
Printed by C. Pandiyarajan B.Sc. SHANTHI PRINTING PRESS Main Road Batlagundu-624202.